**பொறலஸ்கமுவ நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொறலஸ்கமுவ நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள பொறலஸ்கமுவ நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 2155/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் விதிக்கப்பட்ட நகர சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 84 மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 2017 | 2020 இன் பாதீடு நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய மாதிரிப் படிவம் மற்றும் குறியீட்டு இலக்கம் பயன்படுத்தப்பட்டுள்ள துடன் 2021 ஆம் ஆண்டு முதல் குறித்துரைத்த மாதிரிப் படிவம் மற்றும் குறியீட்டு இலக்கங்களை பயன்படுத்தி நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 2155/7 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் விதியின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | இன் பிரகாரம் சபையினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் கணக்குகளை பேணிச் செல்வதற்கு தேவையான மாதிரிப் படிவம் மற்றும் குறியீட்டு இலக்கங்களும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நடப்பாண்டில் நிதிக் காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல பெறுமதிகளுக்காகவும் முனனைய சமமாக்கப்பட முடியுமான காலப்பகுதி தொடர்பாக ஓப்பீட்டுத் தகவல்கள் நகர சபையினால் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2019 ஆம் ஆண்டின் பழைய கணக்கீட்டு முறைமையில் கணக்குகள் தயாரிக்கப்பட்டமையால் முன்னைய ஆண்டின் தகவல்களை உள்ளடக்குவதற்கு வசதியீனமாக இருந்ததுடன் 2021 இன் கணக்குகள் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டுகளில் ஓப்பீட்டுத் தகவல்கள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | ஓப்பீட்டுத் தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 6.15 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பெறுமானத்தேய்வு முறைமை சபையினால் தீர்மானிக்கப்படாமல் அதற்கு புறம்பாக செயற்பட்டமையால் 2020 ஆம் ஆண்டின் பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் 2020 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டமையால் 2021 இன் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது ஒப்பீடு செய்வதற்கு இலகுவான முறையில் உள்ளபடியான, பாதீடு செய்யப்பட்ட மற்றும் முன்னைய ஆண்டின் உள்ளபடியான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | இது தொடர்பான தீர்மானம் மற்றும் கட்டளை கிடைக்காதிருந்தமையால் இந்த முறைமையை பின்பற்ற முடியாதிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட அடிப்படை, பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு முறைமை, இருப்பு பெறுமதியிடல், வருமான செலவினங்களை இனங்காணல் போன்றவை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தவறினால் கணக்குகளுடன் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன் இதனுடன் உரிய விபரங்கள் சமர்ப்பிக்கப்படுமென அறியத் தருகின்றோம். | நியமங்களின் பிரகாரம் சகல முக்கியமான கொள்கைகளும் வெளிப்படுத்தப் படல் வேண்டும். |
| (ஆ) | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி 4/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி நிறுவனத்திற்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது குறைபாடுகள் சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சகல நிலையான சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2020 ஆம் ஆண்டில் மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 61,625,209 தொகை நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாமல் வருமான செலவினக் கணக்கில் மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தளபாடங்கள் மற்றும் உபகரண கணக்கில் ரூபா 1,521,819 உள்ளடக்கப்பட்டிருந்த துடன் மிகுதி மூலதன சொத்துக்கள் 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக மூலதன மானியமாக ரூபா 22,470,773 தொகை கிடைத்திருந்த போதிலும் விரிவான வருமானக் கூற்றில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் ரூபா 22,538,480 தொகை காண்பிக்கப்பட்டமையால் ரூபா 67,707 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். அது மருந்துகளை கொள்வனவு செய்து கொள்வதற்கான மானியமாக இருந்ததுடன் தவறினால் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய மூலதன மானியப் பெறுமதியில் 10 சதவீதம் அதாவது ரூபா 2,247,077 தொகை விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 20,117,129 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 17,870,052 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மூலதன மானியத்தின் கீழ் குறிப்பு இலக்கம் 10 மற்றும் 5 இல் சீராக்கத்தின் பின்னர் மீதிப் பெறுமதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இனங்காணப்படாமல் மூலதன மானியத்தின் கீழ் ரூபா 20,223,696 தொகை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டில் சபை நிதியத்திலிருந்து ரூபா 26,111,676 தொகை செலவில் 34 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்களின் பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது உரிய விபரங்களை பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நிர்மாணங்கள் முடிவடைந்த செயற்திட்டங்கள் மூலதனமாக்கப்பட ல் வேண்டும். |
| (ஊ) | சபை நிதியத்திலிருந்து அமுல்படுத்தப்பட்ட பூர்த்தி செய்யப்படாத 04 செயற்திட்டங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து பூர்த்தி செய்யப்படாத வேலையின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டின் போது உரிய விபரங்களை பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நடைமுறை வேலைகள் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண கணக்கின் மீதி இருப்பு மற்றும் ஒதுக்கீட்டு கணக்கில் மாற்றப்பட்டு புதிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதனத்திற்கான வருமான பங்களிப்பு கணக்கின் மீதி இருப்பு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் மாற்றப்பட்டுள்ளதுடன் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண கணக்கின் மீதி 2021 ஆம் ஆண்டின் போது இருப்பு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு மாற்றப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்து 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி முன்கொண்டு செல்லப்பட வேண்டியிருந்த போதிலும் சில சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் முன்னைய ஆண்டில் முன்கொண்டு வரப்பட்ட மீதியே கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் சில சொத்துக்கள் கணக்கீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சகல ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்து சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 67,707 மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்கத்தின் மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமதி மூலதன மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டில் கலி பவுசர் சேவை வழங்கப்பட்டிருந்த 03 நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய பணம் ரூபா 20,160 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | முத்திரை வருமானமாக ஆண்டில் ரூபா 50,007,624 தொகை கிடைத்திருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 61,461,624 ஆக காண்பிக்கப்பட்டமையால் முத்திரை வருமானம் ரூபா 11,454,000 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் தயாரிக்கும் போது ஏற்பட்ட தாமத வழுவாகும். 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 02 கம்பெக்டர் இன் கடன் தவணை முத்திரை வருமானம் கழிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பதிவுகள் சரியாக கணக்கீடு செய்யப்படாமையால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 13,139,466 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மீதி உறுதிப்படுத்தல் களை பெற்று சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காசு மீதி ரூபா 13,602,463 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் இறுதிக் காசு மீதி ரூபா 125,561,405 ஆனமையால் ரூபா 111,958,942 வேறுபாடொன்று காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 134,084 பெறுமதியான நூலக புத்தகங்கள் மற்றும் ரூபா 1,521,818 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் பிழையாக இருப்பு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் செலவில் பதியப்பட்டமையினால் இருப்பு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 1,655,902 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | திரண்ட நிதியத்தில் முன்னைய ஆண்டில் முன்கொண்டு வரப்பட்ட ஆரம்ப மீதி ரூபா 136,116,047 ஆக இருந்த போதிலும் ரூபா 136,055,341 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 60,706 வேறுபாடொன்று காணப்பட்டது. | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது சரிசெய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 8,284,095 தொகையான கணக்கு விடயத்திற்குத் தேவையான பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நானாவித வைப்பு பட்டோலைகள் தயாரித்து 2021 யூன் 01 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படும். | விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,887,122 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 76,870,331 ஆகும்.

## 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஆதனவரியும் வரியும்**<br>மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட ஆதனவரி வருமானம் ரூபா 27,250,079 ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 10,050,075 தொகை அதாவது 37 சதவீதம் ஆண்டில் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் சிட்டையிடப்பட்ட வருமானத்தில் ஆதனவரி 63 சதவீதம் அறவிடப்பட்டுள்ளது. நடப்பாண்டின் இறுதிக் காலாண்டிற்காக நிலுவையாகவிருந்த ஆதனவரிக்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அடுத்து வரும் ஆண்டின் முதலாவது 10 மாதத்திற்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **ஆ) வாடகை**<br>மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வியாபார நிலையங்களின் வாடகை வருமானம் ரூபா 990,300 ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 760,023 தொகை அறவிடப்பட்ட போதும் ரூபா 132,839 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வியாபார நிலையங்களின் வாடகையில் 76 சதவீதம் அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**<br>2012, 2013, 2014, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவை நிர்மாண வரி வருமானமான ரூபா 53,000 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | சட்டரீதியாக அறவிட முடியாதுள்ள நிலுவை வருமானங்களை பதிவழிப்பதற்கு நியாயப்படுத்தும் அறிக்கையொன்றை பெற்றுக்கொண்டதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | உரிய காலப்பகுதியின் போது வருமானங்களை அறவிடல் வேண்டும். |